# தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

தமிழ்நாடு அமைச்சுப் பணி - நியமனம் (நேரடி) கருணை அல்லது இரக்கத்தின் அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் முதுநிலை நிர்ணயித்தல்.

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணியாளர்-B) துறை**

அரசாணை (நிலை) எண். 951 நாள்: 14.9.1984

ஆவணி 30 - ரக்தாக்ஷி

திருவள்ளுவர் ஆண்டு - 2015

பார்வை:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு கடித எண். 4911/இ2/84 நாள் 27.6.1984.

**ஆணை:**

பணியில் இருக்கும்போது அரசு ஊழியர் திடீரென இறந்துவிட்டால், அவரது குடும்பத்திலுள்ள தகுதி உடைய நபர் எவராவது ஒருவர் கருணை அடிப்படையில் அரசுப் பணியில் அமர்த்தப்படலாம். அப்படி அமர்த்தப்படும் நபரின் கல்வித் தகுதிக்கேற்ப பதவி அளிக்கப்படுகிறது. கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பலர் இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்ற ஒத்த பணியில் அமர்த்தப்படுள்ளனர். மேற்படி இளநிலை உதவியாளர், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் முதலியவர்கள் முதலில் தறகாலிகமாக அமர்த்தப்பட்டு, பிறகு தேர்வாணைக் குழுவின் இசைவைப் பெற்று அவர்களது பணிவரன் முறைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு பணியில் அமர்த்தப்படும் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்ற ஒத்த பணியில் அமர்த்தப்படுபவர்களின் முதுநிலை, அவ்வாண்டு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணி வேட்பாளர்களுக்குக் கீழ் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதற்கேற்ப தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகளில்

எவ்வித வழிமுறையும் செய்யப்படவில்லை. கருணையின் அடிப்படையில் வேலையில் அமர்த்தப்படும் பணி வேட்பாளர் அவர் பணியில் நியமிக்கப்பட்ட நாளினைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் கண்ட நபர்களின் இடையே முதுநிலை நிர்ணயிக்கலாமா எனப் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியில், கருணையின் அடிப்படையில் நியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர்களின் முதுநிலை அவர்கள் எந்த நாளில் முறையாக பணியில் நியமிக்கப்பட்டாரோ, அவ்வாண்டு பட்டியலில் கண்ட பணி வேட்பாளர்களிடையே அவர் முறையாக நியமிக்கப்பட்ட நாளினைக் கருத்தில் கொண்டு, அவரது முதுநிலையைநிர்ணயம் செய்யலாம் என அரசு ஆணை (நிலை) எண்958, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணியாளர்-ஐ) துறை,நாள் 7.10.1983-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதுபோன்ற சலுகையை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணையின் அடிப்படையில் நியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் மற்றும் ஒத்த பணியிலிருப்பவர்களுக்கும் அளிக்கப்படலாம் என்று கருதப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவும் பார்வையில் கண்ட தனது கடிதத்தில் இக்கருத்துருவிற்கு ஒத்திசைவு அளித்துள்ளது.

3. எனவே, கருணையின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்ற ஒத்த பணிகளில் அமர்த்தப்படும் பணி வேட்பாளர்களின் முதுநிலை அவ்வாண்டு தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்ற ஒத்த பட்டியலில் கண்ட பணி வேட்பாளர்களுக்கிடையே அவர் முறையாக நியமிக்கப்பட்ட நாளினைக் கருத்திற்கொண்டு, நிர்ணயிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது. ஏற்கெனவே நியமிக்கப்பட்டவர்களுக்கு இது பொருந்தாது.

4. இந்த ஆணை, இந்த ஆணை வெளியிடும் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

(ஆளுநரின் ஆணையின்படி.)

கு. சொக்கலிங்கம்,
அரசு தலைமைச் செயலாளர்.

## தமிழ்நாடு அரசு

### வேளாண்மைத் துறை

கடித எண்.99397/பொது/84-1/நாள்; 10.12.1984.

__0__

பொருள்: பொதுப்பணிகள் - பணியிலிருக்கும்போது மரணமடைந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளித்தல் தொடர்பாக.

__000__

அரசு ஊழியர்கள் தங்களது பணிக்காலத்தில் மரணமடைந்தால் அவரது குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுகிறது. அவ்வாறு கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படுபவருக்கு வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பைக் கடந்தவர்கள், அரசு விதிகளைத் தளர்த்தி தங்களைப் பணிநியமனம் செய்யுமாறு கோருகின்றனர். இத்தகைய நிகழ்வுகளில் மரணம் அடைந்த அரசு ஊழியர் அரசிடமிருந்து பெற்ற தொகை எவ்வளவு? அத்தொகையை கொண்டு அவர் குடும்பம் தொழில் தொடங்க முடிந்திருக்குமா என்பதையெல்லாம் கவனித்த பின்னரே பரிந்துரை செய்யப்படவேண்டும் என அரசு கருதுகிறது.

2. ஆகையால் பணியிலிருக்கும்போது மரணம் அடைந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் ஒருவருக்கு வயது வரம்பை தளர்த்தி கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய பரிந்துரை செய்யும்போது அவர் இறந்தபோது அரசிடமிருந்து பெறப்பட்ட தொகையைக் கொண்டு அவர் குடும்பத்தால் தொழில் தொடங்க முடிந்திருக்குமா என்பதை கவனித்த பின்னரே செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்ள பணிக்கப் பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

ஒம்/-

அரசு துணைச் செயலாளருக்காக,

## தமிழ் நாடு அரசு

### வேலைவாய்ப்புத் துறை

**க. எண். நிலை 125/P1/85 நாள் 30.4.85**

__0__

பொருள்: பொதுப்பணிகள் - இறந்த அரசுப் பணியாளரின் குடும்பங்களுக்கு கருணை அடிப்படையில் வேலை அளிப்பது - நியமன முறைகள் - குறித்து - சில உத்திரவுகள் - வெளியிடப்படுகின்றன.

பார்வை: 1. அரசு நிலை ஆணை எண்.73 வேலைவாய்ப்பு பணிகள் நாள் 26.10.83

__o0o__

மறைந்த அரசு பணியாளரின் குடும்பத்தில் எவரேனும் வேலையிலிருந்தால் அவர் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்குக் கருணை அடிப்படையில் அரசுப்பணி அளிக்கப்படமாட்டாது என உத்திரவிடப்பட்டுள்ளது.

2. அரசுப்பணியிலிருக்கும்போது இறந்த ஒரு அலுவலரின் இரண்டாவது மனைவிக்கு கருணை அடிப்படையில் பதவி கோரியது குறித்து அரசு பரிசீலனை செய்தது. அத்தருணத்தில், பொதுவாக ஒருவர் இறந்துவிட்டால் அவரின் முதல்மனைவின் குழந்தைகள் மறைந்தவரின் இரண்டாவது மனைவியைக் குடும்பத்தில் வைத்துப் பராமரிப்பதில்லை என்பதும் அதேபோல 2வது மனைவியின் குழந்தைகள் முதல் மனைவியையோ அல்லது அன்னாரது குழந்தைகளையோ கவனிப்பதில்லை என்பதும் அறிய வந்தது. இந்தச்சூழ்நிலையில் ஏதேனும் ஒரு குடும்பம் தனித்து விடப்பட்டு வேறு வருமானமின்றி வாழ்க்கையைக் கழிப்பது அவர்களுக்கு ஒரு பெரிய சிரமமாகக் கருதப்படுகிறது. இதனை அரசு நன்கு பரிசீலனை செய்தது. இரண்டு மனைவியர்களை மணந்த அரசுப் பணியாளர் இறந்தால் அவரது இரண்டு குடும்பங்களின் சூழ்நிலையையும் கவனிக்க வேண்டியுள்ளது. இந்த சூழ்நிலையில் தன்பிள்ளைகள் யாரேனும் சம்பாத்திக்காமலோ அல்லது தான் சம்பாதிக்காமலோ நிராதரவாகத் தனித்து விடப்படும் மனைவிக்குக் கருணை

அடிப்படையில் அவர் தகுதிக்கேற்ப ஏதேனும் ஒரு அரசுப் பணியை வழங்கலாம் என அரசு உத்தரவிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
திரா. தண்டபாணி
அரசு ஆணையர் மற்றும் செயலாளருக்காக.

## தமிழ் நாடு அரசு

### சுருக்கம்

சமூக நலம் - பணியாளர் தொகுதி - அரசுத்துறைகளில் விதவை என்கிற அடிப்படையில் வேலை வாய்ப்பு சலுகை பெற்றவர்கள் மறுமணம் செய்து கொள்பவர்கள் தொடர்ந்து பணியில் நீடித்தல் - ஆணையிடப்படுகிறது.

---

### சமூக நலத்துறை

அரசு ஆணை நிலை எண்.654 நாள் 23.4.1987
சித்திரை 10, பிரபவ, திருவள்ளுவர் ஆண்டு 2018.

பார்வை:- (1) 10.7.1987 நாளிட்ட அரசு ஆணை நிலை எண்.1262, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.

(2) 29.5.82 நாளிட்ட அரசு கடித எண். 21106/சந6/82, சமூக நலத்துறை.

(3) 8.3.1984 நாளிட்ட அரசு ஆணை நிலை எண். 225, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை.

(4) 26.11.1984 நாளிட்ட மருத்துவப்பணி குடும்ப நல இயக்குநர் நக.எண்.135953/நிபி5/1/84.

(5) 24.7.1985 நாளிட்ட சமூக நல இயக்குநர், ஓமுஎண் 34949/அஅ3/85,

ஆணை:-

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் 10.7.1981 நாளிட்ட அரசாணை நிலை எண். 1262-ல் வறுமை சூழலில் உள்ள விதவைகள் அரசு மருத்துவ மனைகளில் தமிழ்நாடு அடித்தளப்பணிகள்/மருத்துவ சார்நிலைப் பள்ளிகளின் கீழ்வரும் 8 வகையினங்களில் கருணை அடிப்படையில் பணியமர்த்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது:-

(1) செவிலியர் உதவியாளர்கள்

(2) ஆயா

(3) பெருக்குபவர்

(4) துப்புரவுபணியாளர்கள்

(5) மருத்துவமனை ஊழியர்கள்

(6) சமையல் செய்பவர்கள்

(7) சமையல் உதவியாளர்கள்

(8) தண்ணீர் பணியாளர்கள்.

2. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் 8.3.1984 நாளிட்ட அரசு ஆணை நிலை எண். 225-ல் ஆதரவற்ற விதவைகள் அரசுப்பணிகள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் ஆகியவைகளில் எந்த ஒரு பணியிடத்திற்கும் கல்வி மற்றும் பிற தகுதிகள் இருந்தால், அவர்களுக்குத் தனிச்சலுகை அளிக்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தின் கீழ் குழந்தைகள் நல அமைப்பாளர் (Child Welfare Organiser) மற்றும் குழந்தைகள் நல உதவியாளர் (Child Welfare Assistant) ஆகியோரை நியமனம் செய்வதில் விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

3. திருமதி வள்ளியம்மாள் என்ற விதவை வேலை வாய்ப்பகம் மூலம் முன் கொணரப்பட்டு துப்புரவுப் பணியாளராக கடலூர் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் பணியமர்த்தப்பட்டார் எனவும், அவர் பணியில் சேர்ந்த 2 1/2 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே மருத்துவமனையில் சிற்றூழியராகப் பணிபுரியும் ஒருவரை மறுமணம் செய்து கொண்டதாகவும், இவர் சுமார் 2 1/2 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும், மேற்கண்ட அரசாணையின்படி விதவைகள்

பணியமர்த்தப்பட்டபின் மறுமணம் செய்துகொண்டால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்வது சம்பந்தமாக அரசு ஆணை ஏதும் வெளியிடப்பட்டிருந்தால் அதன் நகலையும், அவ்வாறு ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லையெனில் திருமதி வள்ளியம்மாளை பணியில் தொடர்ந்து நீடிக்கச் செய்யலாமா எனவும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் விளக்கம் வேண்டியுள்ளார்.

4. இதுகுறித்து சமூக நல இயக்குநர் தம்முடைய குறிப்புரையில் விதவை திருமணத்தை அரசு ஆதரிப்பதால், விதவை என்ற அடிப்படையில் வேலை பெற்றவர்கள் பணிக்காலத்தில் மறுமணம் புரிந்து கொண்டாலும் அவர்களைப் பணியில் தொடர்ந்து நீடிக்கச்செய்யலாம் என்று தெரிவித்துள்ளார்.

5. விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிப்பதே அரசின் கொள்கையாகும். எனவே, விதவை என்ற முறையில் பெற்ற அல்லது பெற்றுவரும் சலுகைகளை அவர் மறுமணம் செய்து கொண்டார் என்பதற்காக திரும்பிப்பெறுவது முறையானதாகாது. எனவே மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் 10.7.1981 நாளிட்ட அரசாணை எண். 1262-ன் படி வறுமை சூழலில் உள்ள விதவை, மருத்துவமனைகளில் தமிழ்நாடு, அடித்தளப் பணிகள் மருத்துவச் சார்நிலைப் பணிகளின் கீழ் வரும் 8 வகை இனங்களின் கீழ் பணியில் அமர்த்தப்பட்ட பின்பு அவ்விதவை மறுமணம் செய்துகொண்டால் அவ்விதவை அப்பணியின் தொடர்ந்து நீடிக்கலாம் என்றும் மற்றும் பணியில் இருக்கும் காலத்தில் இறந்துபட்ட அரசு ஊழியரின் மனைவியை (விதவை) கருணையின் அடிப்படையில் அரசு பணியில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வேலை கிடைத்தபிறகு அவ்விதவை மறுமணம் செய்து கொண்டால் அவரை அப்பணியில் நீடிக்க விடலாம் என அரசு கருதுகிறது. எனவே, விதவை மறுமணத்தை ஊக்குவிப்பது அரசின் கொள்கை. விதவை என்கிற அடிப்படையில், அரசுத்துறைகளில் வேலை வாய்ப்புச்சலுகை பெற்றவர்கள், பின்னர் அவர்கள் மறுமணம் செய்து கொண்டாலும் அவர்களைத் தொடர்ந்து பணியில் நீடிக்க அனுமதிக்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

*(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி.)*

*சி. தங்கராசு,*
*அரசு ஆணையர் மற்றும் செயலர்.*